"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,324,73,81,000/—, மூலதனக் கணக்கில் ரூ.2,068,00,01,000/— மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000,00,06,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (22—7—2014) செவ்வாய்க்கிழமை காலை 10—00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3—15 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

76. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டத்திலிருந்து (தமிழ்நாடு சட்டம் 22/2012) சென்னை மோனோ ரயில் திட்டத்திற்கு விலக்களித்தது குறித்து நிதி (உள்கட்டமைப்பு குழு)த் துறையின் 7—4—2014 ஆம் நாளிட்ட 99 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/2012) 35(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

77. 14—1—2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்—III, பிரிவு 1(a)—ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் SRO A—1(b)/2011 ஆம் எண் அறிவிக்கைக்கு பிழைத் திருத்தம் வெளியிட்டது குறித்து 16—12—2013 ஆம் நாளிட்ட 159 ஆம் எண் அரசாணையில்

வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

78. (i) திருச்சி–620001, கன்டோன்மென்ட்–ல் உள்ள திருவாளர்கள் சில்பா ஆட்டோமெக் (திருச்சி) பிரைவேட் லிமிடெட் நிறுவனமானது கும்பகோணம்–612002, பாலாஜி நகரில் உள்ள மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான திருவாளர்கள் ஈஸ்வர் பள்ளிக்கு, ஸ்வராஜ் மேஜ்டா பேருந்து விற்பனையின் மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து 10–6–2009 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம்–II, பிரிவு–1–ல், வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(1)/CTR/12/2009 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 17–9–2013 ஆம் நாளிட்ட 119 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (ii) மேற்படி நிறுவனத்திற்கு 24+1 இருக்கைகள் கொண்ட பேருந்து விற்பனை செய்ததுமீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 17–9–2013ஆம் நாளிட்ட 120 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

79. 30–5–1962 ஆம் நாளிட்ட புனித ஜார்ஜ் கோட்டை அரசிதழின் பாகம்–II–ல் வெளியிடப்பட்ட வருவாய் துறையின் S.R.O. எண் 2437/1962 என்ற அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி1) துறையின் 16–12–2013 ஆம் நாளிட்ட 158 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

80. யாதொரு வணிகரால், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, மாநிலத்தில் மின் சக்தியை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் மின்னாக்கிகளை விற்பனை செய்வதன் பேரில் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தவரையில், 1–4–2008 ஆம் நாள் முதல் 11–7–2011 ஆம் நாள் வரையில் 12.5 சதவீதத்திலிருந்து 4 சதவீதத்திற்கும், 12–7–2011 ஆம் நாள் முதல் 6–12–2012 ஆம் நாள் வரையில் 14.5 சதவீதத்திலிருந்து

5 சதவீதமாகவும் வரி வீதத்தைக் குறைத்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 9—12—2013 ஆம் நாளிட்ட 156 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

81. சென்னையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு தலைவரை நியமனம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (இ2) துறையின் 13—9—2013 ஆம் நாளிட்ட (3d) *11 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

82. திருப்பூர், ஈரோடு, வேலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாநகராட்சிகளில் கோட்டங்கள் மறுசீரமைப்பு மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கு சம்பந்தப்பட்ட மாநகராட்சிகளில் சாதாரண தேர்தல்களின்போது இட ஒதுக்கீடு ஆகியவை தொடர்பாக சம்பந்தப்பட்ட சட்டங்களின் பல்வேறு பிரிவுகளின்மீதான அரசின் அதிகாரங்களை முறையே (i) *திருப்பூர் மாநகராட்சியைப் பொறுத்தவரை, திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர்;* (ii) *ஈரோடு மாநகராட்சியைப் பொறுத்தவரை, ஈரோடு மாநகராட்சி ஆணையாளர்;* (iii) *வேலூர் மாநகராட்சியைப் பொறுத்தவரை, வேலூர் மாநகராட்சி ஆணையாளர் மற்றும்* (iv) *தூத்துக்குடி மாநகராட்சியைப் பொறுத்தவரை, தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் ஆகியோர்களுக்குப் பகிர்ந்தளித்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 12—9—2011 ஆம் நாளிட்ட 139 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/2008) 10(3) பிரிவு மற்றும் 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2008) 10(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன].*

83. திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு நான்கு வார்டுகள் குழுக்களை ஏற்படுத்தியது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 30–9–2011 ஆம் நாளிட்ட 148 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

84. (i) *திருப்பூர் மாநகராட்சி;* (ii) *ஈரோடு மாநகராட்சி;* (iii) *வேலூர் மாநகராட்சி மற்றும்* (iv) *தூத்துக்குடி மாநகராட்சி ஆகிய மாநகராட்சிகளில் அறிவிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலைக் குழுக்களை உருவாக்கியது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 4–11–2011 ஆம் நாளிட்ட 169 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2008ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/ 2008) 10(3) பிரிவு மற்றும் 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2008) 10(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன].*

85. 2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/2013) 19–2–2014 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 17–2–2014 ஆம் நாளிட்ட 24 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/2013) 10(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

86. 2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

87. 2009–2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஊரக வீட்டு வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)